# பத்திரிக்கை செய்தி

**ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை திருவாரூர் மாவட்டம், அரசு வழங்கும் போஸ்ட் மெட்ரிக் கல்வி உதவித்தொகை திட்டம் குறித்த தகவல்**

உயர்க்கல்வி பெறுவதற்கு பொருளாதாரம் தடையாக இருக்க கூடாது என்ற உன்னத நோக்கிலும், அனைத்து சமுதாய மாணவ / மாணவியர்களை கொண்டு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல மாணவ / மாணவியர்களும் உயர்க்கல்வி பெற வேண்டும் என்ற சிந்தனை அடிப்படையிலும், தமிழக அரசானது 10ம் வகுப்பிற்கு ·மேற்பட்ட வகுப்புகளில் பயிலும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மற்றும் மதம் மாறிய கிறிஸ்துவ ஆதிதிராவிடர் மாணவ / மாணவியர்களுக்கு போஸ்ட் மெட்ரிக் கல்வி உதவித்தொகை திட்டத்தினை செயல்படுத்தி வருகிறது. இத்திட்டத்தின்படி கற்பிப்பு கட்டணம் (Tuition Fees) உட்பட கட்டாய திருப்பி செலுத்தப்படாத கட்டணங்கள், பராமரிப்புப்படி போன்றவை ஆதிதிராவிடர் மற்றும் பழுங்குழயினர் நலத்துறையால் வழங்கப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின்படி கீழ் பயன்பெற ஆதிதிராவிடர் / பழுங்குழயினர் மாணவ / மாணவியரின் பெற்றோர் / பாதுகாவலர் ஆண்டு வருமானம் ரூ.2.5 லட்சத்திற்கு மிகாமலும் மதம் மாறிய கிறிஸ்துவ ஆதிதிராவிடர் மாணவ மாணவ / மாணவியரின் பெற்றோர் / பாதுகாவலர் ஆண்டு வருமானம் ரூ.2.0 லட்சத்திற்கு மிகாமலும் இருக்க வேண்டும்.

## அரசு / அரசு உதவிபெறும் கல்லூரிகள்

இத்திட்டத்தின்படி அனைத்து அரசு / அரசு உதவிபெறும் கல்லூரிகளில் பயிலும் தகுதியுள்ள அனைத்து ஆதிதிராவிடர் / பழங்குடியினர் மற்றும் மதம் மாறிய கிறிஸ்துவ ஆதிதிராவிடர் மாணவ / மாணவியர்களுக்கு கற்பிப்பு கட்டணம் உட்பட கட்டாய திருப்பி செலுத்தப்படாத கட்டணங்கள் அரசால் கல்லூரிகளுக்கு நேரடியாக வழங்கப்படுகிறது.

மேலும் இக்கல்லூரிகளில் பயிலும் தகுதியுள்ள மாணாக்கருக்கு பராமரிப்புப்படி தனியே மாணாக்கர்களின் வங்கி கணக்கின் அரசால் மின்னனு தீர்வை முறையின் மூலம் செலுத்தப்படுகிறது.

## சுய நிதிக்கல்லூரிகள்

சுயநிதிக்கல்லூரிகள் (பொறியியல், மருத்துவம், மருத்துவம் சார்ந்த படிப்புகள் ஆசிரியர் கல்வி பயிற்சி படிப்புகள்) பயிலும் தகுதியுள்ள அனைத்து ஆதிதிராவிடர் / பழங்குடியினர் மற்றும் மதம் மாறிய கிறிஸ்துவ ஆதிதிராவிடர் மாணவ / மாணவியருக்கு "சுயநிதிக்கல்லூரிகளுக்கான கட்டண நிர்ணயக்குழு" நிர்ணயித்த கட்டாய திருப்பி கட்டணங்கள் மட்டும் அரசால் கல்லூரிகளுக்கு வழங்கப்படுகிறது.

அனைத்து சுயநிதிக்கல்லூரிகளும் அரசு நிர்ணயித்த கல்வி கட்டணங்கள் / சுயநிதிக்கல்லூரிகளுக்கான கட்டண நிர்ணயக்குழு நிர்ணயித்த கட்டணங்கள் தகுதியுள்ள மாணாக்கரிடமிருந்து வசூலிக்கக்கூடாது என்று அரசால் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மேலும் தொடர்புடைய அனைத்து கல்லூரிகளும் மாணாக்கரிடமிருந்து தேவையான விபரங்களை பெற்று இணையதளத்தின் மூலம் (www.escholarship.tn.nic.in) மூலம் விண்ணப்பித்து மாணாக்கர்கள் கல்லூரிகளுக்கு செலுத்த வேண்டிய கல்வி கட்டணங்களை அரசிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம் என திருவாரூர் மாவட்ட **ஆட்சித்தலைவர்** அவர்கள் அறிவிக்கிறார்கள்.

ஒம்/--
மாவட்ட ஆட்சித்தலைவர்,
திருவாரூர்

// ஆணைப்படி //

மாவட்ட ஆட்சித்தலைவருக்காக,
திருவாரூர்